1972 ஆகஸ்ட் 21]

Siruvani Scheme.

* 147. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that there are differences of opinion between the Governments of Tamil Nadu and Kerala regarding the utilisation of Siruvani water; and

(*b*) if so, the details of the same ?

சிறுவாணித் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறுவாணி நீரைப் பயன்படுத்துவது குறித்து தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்குமிடையே கருத்து வேற்றுமைகள் உள்ளனவென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) & (இ) : சிறுவாணித் திட்டம் குறித்த வரைவு ஒப்பந்தத்தை ஆய்வு செய்வதற்காக திருவனந்தபுரத்தில் கடந்த ஜனவரி–பிப்ரவரி திங்களில் நடைபெற்ற செயலாளர் அளவிலான விவாதங்களின் போது சில கருத்து வேறுபாடுகள் எழுந்தன. முக்கியமாக இத்திட்டம் செயல்படத் தொடங்குவதிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கச் செய்யவேண்டிய நீரின் மொத்த அளவு அந்த நீரைத் தொழில் காரியங்களுக்காகப் பயன்படுத்தல் முதலியவை தொடர்பாக இந்தக் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. கேரள அரசின் முடிவிற்காக நமது அதிகாரிகளின் கருத்துக்களை கேரள அரசின் முன் வைப்பதாக கேரள அதிகாரிகள் உறுதி கூறினர். இவை குறித்து அண்மையில் நடைபெறவிருக்கிற அதிகாரிகள் அளவிலான கூட்டத்தில் மேற்கொண்டும் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நமது குடிநீர் தேவைகளுக்காகக் கொடுப்பதை அவர்கள் மறுக்கவில்லை, தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக கொடுப்பதைத்தான் அவர்கள் மறுக்கிறார்கள் என்றால், இதுபற்றி மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மகாநாட்டிலே இதுபற்றி விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து கேரள அரசுடன் இதுபற்றிக்

கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறோம். இதுபற்றி, நான் சொன்னது போல, அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொண்டு விவாதங்கள் நடைபெற இருக்கின்றன. அதற்குப் பிறகு அவர்கள் இங்கே வந்து முடிவான கையொப்பம் இடவேண்டியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நாம் கொடுக்கின்ற வரைபடத்தின்படி அவர்கள் கட்டுகின்ற அணைக்கட்டில் கிடைக்கும் நீர் பற்றிய விவாதம் வருகிறது என்றால் இப்போது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் என்ன? அவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்க அளவில் நாம் திட்டம் இயற்றவில்லையா? அதன் அடிப்படை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதில் இரண்டு கருத்துக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒன்று குடி நீர் பற்றியது. மற்றொன்று "இண்டஸ்ட்ரியல் பர்ப்பஸ்" களுக்காக, அதாவது தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக, இவ்வாறு இரண்டு இருக்கின்றன. இதில் 1971-ல் நமக்குக் கிடைக்க வேண்டிய நீர் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். டெல்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மகாநாட்டில் இவைபற்றி விவாதம் செய்யப்பட்டு இதில் ஒரு தீர்வு காணப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். மேற்கொண்டு ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். இதற்காக நமது அரசு அதிகாரிகள் கேரள அரசு அதிகாரிகளுடன் கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். விரைவாக முடிவு காணப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தச் சிறுவாணி ஆற்றுத் திட்டத்தின்கீழ் எவ்வளவு கன அடித் தண்ணீர் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்? அதாவது அந்த ஒப்பந்தத்தின்கீழ் எவ்வளவு கன அடித் தண்ணீர் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் மழைக் காலத்தில் எவ்வளவு நீர் விட இருக்கின்றார்கள்? இந்த அணைக்கட்டு கட்டிய பிறகு, எவ்வளவு தண்ணீர் கொடுக்க ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1,300 மில்லியன் கனஅடித் தண்ணீர் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.